உயர்நிலை 3

மரபுத்தொடர்கள் 39 – 48 / 57 – 61

இணைமொழிகள் 23 – 28 / 33 – 35

உவமைத்தொடர்கள் 23 – 28 / 33 – 35

பழமொழிகள் 28 – 34 / 39 - 42

**மரபுத்தொடர்கள்**

39.காக்கை பிடித்தல் - ஒன்றைப் பெற இனிமையாகப்பேசுதல்

கோபால் பதவி உயர்வுக்காகத் தன் முதலாளியிடம் இனிக்கப்பேசி காக்கை பிடித்தான்.

40.காட்டிக் கொடுத்தல் - மாட்டிவிடுதல்

காவலரிடம் பிடிபட்ட திருடன் தன் கூட்டாளிகளைக் காட்டிக் கொடுத்தான்.

41.குருட்டுப்பாடம் - புரிந்து கொள்ளாமல் படித்தல்

குருட்டுப்பாடம் படித்த ரேணுகா தேர்வில் தோல்வி அடைந்தாள்.

42.கைகொடுத்தல் - உதவிசெய்தல்

வேலை இழந்த இந்தியர்களுக்கு சிண்டா கைகொடுத்து உதவி செய்தது.

43.கொட்டமடித்தல் - சப்தமாகப்பேசி விளையாடுதல்

ஆசிரியர் இல்லாதபோது வகுப்பில் கொட்டமடித்த மாணவர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை ஆசிரியர் தண்டனை கொடுத்தார்.

44.தட்டிக் கழித்தல் - பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமை

தமிழ் முகாமுக்கு ஒப்படைத்த வேலைகளை ஒரு குழு எங்களால் முடியாது என்று தட்டிக் கழித்தது.

45.தலையிடுதல் - ஒரு காரியத்தில் ஈடுபடுதல்

அண்டை நாடுகளின் உள்விவகாரங்களில் மற்ற நாடுகள் தலையிடுதல் கூடாது.

46.தோள் கொடுத்தல் - உதவி செய்தல்

தந்தையை இழந்த கோபு பகுதி நேர வேலை செய்து குடும்பத்திற்குத் தோள்கொடுத்தான்.

47.நொடித்துப்போதல் - நட்டமடைதல்

பல தனியார் நிறுவனங்கள் நொடித்துப்போனதால் அரசாங்கம் பல சலுகைகளை அவர்களுக்கு வழங்கியது.

48.மனக்கோட்டை - கற்பனை

தன் மகன் தேசிய பல்கலைக் கழகத்தில் படிக்க வேண்டும் என்று கமலா மனக்கோட்டை கட்டியிருந்தாள்.

57.அவசரக்குடுக்கை - எதிலும் அவசரப்படுதல்

பெரியவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது குறுக்கிட்டுப் பேசிய தன் மகனைத் தாயார் அவசரக்குடுக்கையாகப் பேசாதே என்று எச்சிரித்தாள்.

58.அள்ளியிறைத்தல் - அதிகமாக செலவு செய்தல்

தன் மகள் அனிதாவின் திருமணத்திற்கு அவள் தந்தை பணத்தை அள்ளியிறைத்தார்.

59.இடங்கொடுத்தல் - வழி ஏற்படுத்திக் கொடுத்தல்

மகாத்மா காந்தி நாம் தீய பழக்கங்களுக்கு இடங்கொடுக்கக்கூடாது என்று அறிவுரை கூறினார்.

60.இரண்டுபடுதல் - பிளவு ஏற்படுதல்

வளர்ந்த பிள்ளைகள் பெற்றோரின் அறிவுரையைக் கேட்காததால் குடும்பம் இரண்டு பட்டது.

61.இழுக்கடித்தல் - கால தாமதம் செய்தல்

கணேசன் பாலாவிடம் வாங்கிய கடனை உடனே கொடுக்காமல் இழுக்கடிக்கிறான்.

இணை மொழிகள்

23.சட்ட திட்டம் - கட்டுப்பாடு

ஒரு நாட்டின் சட்ட திட்டங்களை நாம் மதித்து நடக்க வேண்டும்.

24.சீரும் சிறப்பும் - மிகப்புகழுடன்

தென்கிழக்கு ஆசிய விளையாட்டுப்போட்டிகள் சீரும் சிறப்புமாக கோலாலம்பூரில் நடைபெற்றன.

25.தப்பும் தவறும் - தவறாக

தொடக்க நிலையில் கட்டுரைகளைப் பலரும் தப்பும் தவறுமாகவே செய்வர்.

26.நகமும் சதையும் - நெருக்கமாக

அல்லியும் முல்லையும்  நகமும் சதையுமாக வாழ்ந்தார்கள்.

27.நகை நட்டு -  அணிகலன்

நான் வழிபடும் சீதை நகை நட்டு அணியவில்லை என்று மகாத்மா காந்தி கூறினார்.

28.நோய் நொடி - நோய்

சிங்கப்பூரில் பலர்  நீண்ட ஆயுளுடன் நோய் நொடி இல்லாமல் வாழக் காரணம் சிறந்த மருத்துவ சிகிச்சை.

33.அகமும் புறமும் - உள்ளேயும் வெளியேயும்

புதுமனை புகுவிழாவிற்கு வந்திருந்த விருந்தினர்களை நிலவழகன் அகமும் புறமும் மகிழ வரவேற்றார்.

34.அறக்கப்பறக்க -  அவசரமாக

வேலைக்குச் செல்ல நேரமாகிவிட்டதால் தாயார் அறக்கப்பறக்கச் சமைத்தார்.

35.ஊரும் பேரும் -  எல்லோரும் அறிய

புகழ்பெற்ற திரைப்பட நடிகை ஊரும் பேரும் தெரியாத ஒருவரைத் திருமணம் செய்துகொண்டாள்.

உவமைத்தொடர்

23.கீரியும் பாம்பும் போல

மகிழ்னனும், முகிழ்னனும் கீரியும் பாம்பும் போல வாழ்ந்தனர்.

24.குன்றின் மேலிட்ட விளக்கு போல

குன்றின் மேலிட்ட விளக்கு போல அவருடைய புகழ் உலகமெல்லாம் ஒளிவிடுகிறது.

25.சேற்றிலே முளைத்த செந்தாமரை போல

சாதாரண குடும்பத்தில் பிறந்த மாதவி சேற்றிலே முளைத்த செந்தாமரை போலப் பல உயர் பண்புகள்  பெற்று சிறந்து விளங்கினாள்.

26.சுடச் சுடரும் பொன் போல

பெற்றோர் கூறும் அறிவுரைகள் நமக்கு வருத்தத்தைத் தந்தாலும் சுடச்சுடரும் பொன்போலப் பிற்காலத்தில் நமக்கு நன்மை தரும்.

27.சூரியனைக் கண்ட பனிபோல

காணாமல் போன தன் மகனைக் கண்டதும் கோமதியின் துன்பமெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல விலகின.

28.சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல

இன்று நடைபெற்ற பட்டிமன்றத்தில் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போலத் தனசேகரன் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தானே தவிரச் சரியாக வாதிடவில்லை.

33.இரும்பை இழுக்கும் காந்தம் போல

தற்காலத் திரைப்படப்பாடல்கள் இரும்பை இழுக்கும் காந்தம் போல இளைஞர்களை இழுக்கின்றன.

34.எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல

ஏழ்மையில் வாடும் சில நாடுகள் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல தீவிர வாதத்தாலும் துன்பப்படுகின்றன.

35.கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல

இசையமைப்பாளர் ரகுமானை நீண்ட நாட்களாகச் சந்திக்க விரும்பிய வேணுகோபால் குட்டி இந்தியாக் கடைத்தொகுதியில் எதிர்பாராமல் அவரைச் சந்தித்ததும் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல மகிழ்ந்தார்.